**O.S.No. 120/2018**

**DW 1 :** வெங்கடேசன்                                        தேதி 11.02.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிவாசாஆ 25 முதல் 28 வரையுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. பிவாசாஆ 29 மற்றும் 30 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் கோவையில் ராமகிருஷ்ணா மிசன் வித்யாலயாவில் படித்தேன். பிவாசாஆ 32 ல் கார்டியன் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து ஓ.ஏ.கே. நாச்சிமுத்துமுதலியாருடையது அல்ல என்றால் சரியல்ல. 1981 ல் என் தந்தை வி.எஸ்.பரமசிவம் உயிருடன் இல்லை. அப்போது என் தாயார் இருந்தார். பிவாசாஆ 32 ல் வழக்கு தாக்கல் செய்யும் போது செய்யாமல் பின்னிட்டு அதை எதிர் வழக்குரை தாக்கல் பிரதிவாதி தரப்பில் செய்த பின்னிட்டு வழக்கிற்காக நான் தயார் செய்து பிவாசாஆ 32 ஐ நான் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 35 ஆவணம் வரவேற்பு பத்திரிக்கையும் வழக்கிற்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பிவாசாஆ 38 ஆவணம் ஓ.ஏ.கே. நாச்சிமுத்துமுதலியாருக்கு நான் ஈமச்சடங்கு செய்ததற்கான குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான் நான் தான் ஈமச்சடங்கு செய்தேன். என்.ராஜம்மாளுக்கு 2.2.2019 ல் நான் ஈமச்சடங்கு செய்ததாக பிவாசாஆ 54 ல் குறிப்பு இல்லை என்று சொன்னால் என்றால் சரிதான் நான் தான் ஈமச்சடங்கு செய்தேன். அந்த ஆவணத்தில் யார் ஈமச்சடங்கு செய்தார்கள் என்று குறிப்பிட மாட்டார்கள். என்னுடைய முதன்மை விசாரணையில் என்.ராஜம்மாள் எழுதி வைத்தாக சொல்லப்படும்

வாசாஆ 1 ஐ கையெழுத்தை தடய அறிவியல் துறைக்கு அனுப்புவதாக சொல்லியிருந்தேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. வாதி தரப்பில் தான் கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப ஆட்சேபணை உள்ளதா என்று கேட்கப்பட்டது. ராஜம்மாள் எழுதி வைத்ததாக சொல்லப்படும் தானசெட்டில்மென்ட் மற்றும் பிவாசாஆ 53 வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றில் உள்ள கையெழுத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். வாசாஆ 1, பிவாசாஆ 53 மற்றும் பிவாசாஆ 46 ஆவணங்களில் உள்ள ராஜம்மாளின் கையெழுத்தை ஒப்பீடு செய்தால் தான் வாசாஆ 1 ல் உள்ள கையெழுத்து ராஜம்மாளுடையது என்று தெரிய வரும் என்றால் சரியல்ல. வழக்கு பின்னிட்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் இவ்வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.